# கிறிஸ்துவைப் போல வாழவேண்டும்

கிறிஸ்துவைப் போல வாழ வேண்டும்! கிறிஸ்துவின் சாயலிலே வளர வேண்டும் அல்லது கிறிஸ்தவனாக வாழ வேண்டும்! என்று கூறும் போதும் உங்கள் மனதில் உண்டாகும் தோற்றங்கள் என்ன? அற்புத அடையாளங்களை செய்வதா? நன்மை செய்கிறவர்களாய் வாழ்வதா? எளிமையான வாழ்க்கை முறையை தெரிந்து கொள்வதா? பாவிகளை தேடிச் சென்று பணிபுரிவதா? நன்மை செய்து மற்றவர்களுக் காக பாடுகள் துன்பங்களை சகிப்தா? இப்படியாக பற்பல காரியங்களை நாம் பட்டியல் படுத்திக் கொள்ளலாம். முதலாவதாக, இவற்றுள் எதை இயேசு கிறிஸ்துவிடம் இருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் எண்ணிக் கொள்கின்றீர்கள். மேற்கூறியவைகள் யாவும் நன்மையானவைகள். ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே காணப்பட வேண்டியவைகள். இன்று பொதுவாக விசுவாசிகளும் ஊழியர்களும் எதனாலே ஈர்கப்பட்டுப் போகின்றார்கள்? எங்கே அதிகமானவர்கள் கூடி வருகின்றார்கள். அற்புத அடையாளங்களை பார்க்கும்படி அதிகதிகமாய் கூடி வருகி ன்றார்கள் அல்லவா? ஆனால், கிறிஸ்துவைப் போல மற்றவர்களை மன்னிக் வேண்டும் என்று ஒரு தேவ ஊழியர் ஒருவர் பிரசங்கிக்கும் இடத்தில் எத்தனை பேர் ஆவலோடு கூடி வருவார்கள்? நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். அவர் தம்மை அனுப்பிய பிதாவாகிய தேவனிற்கு முற்றிலும் கீழ்படிவுள்ளவராக, அவருடைய விருப்பம் தன்னில் நிறைவேற இடம் கொடுத்தார். அதாவது, அவர் அற்புதம் செய்யும் வேளைகள் இருந்தது. அவர் உபதேசித்து, பிரசங்கித்து வேளைகள் இருந்தது. ஏழை எளியவர்களுக்கு உதவி செய்த நேரங்கள் இருந்தது. அவர் இந்த பூவுலகிற்கு வந்த நோக்கத்தின் வேளை வந்தபோது, அவர் எப்போதும் இருந்தது போல, என்னுடைய விருப்பத்தின்படியல்ல உம்முடைய விருப்பப்படி எனக்கு ஆகக்கடவது என்று கூறினார்."அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

**மத்தேயு 11:29**

**நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்;**

**ஜெபம்:** நான் இரட்சிபடையும்படி உம்முடைய குமாரனை எனக்காக அனுப்பிய தேவனே, நான் திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் போல வாழ எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எஜமானனும் ஊழியனும்

பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார். சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்தம்முடையகையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக் கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து. போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார். அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான். ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன் என்றார். இன்று சிலர், இந்நாட்களிலே மற்றவர்களுடைய கால்களை கழுவுவதை வழக்கமாக்கி செய்து வருகின்றார்கள். ஆண்டவர் இயேசு செய்த இந்த கிரியை யின் கருப்பொருளை உணர்ந்து, உண்மையிலே, மனத்தாழ் மையோடு, அதை செய்ய வேண்டியவர்களுக்கு செய்தால் அதிலே நன்மை உண்டாயிருக்கும். கருப்பொருளை அறிந்து கொள்ளுங்கள். ஆண்டவராகிய இயேசுதாமே சீஷர்களின் எஜமானனாக இருந்தார். இன்றும் என்றென்றும் இருக்கின்றவராய் இருக்கின்றார். நான் தலைவன், நீ சீஷன் என்கின்ற மனநிலை இல்லாமல் பிதவாகிய தேவனுடைய சித்தம் தம்மில் நிறைவேற தம்மை ஒப்புக் கொடுத்தது போல நாமும் எப்போதும், பதவி அந்தஸ்து என்கின்ற மனநிலையற்றவர்களாய் தேவ சித்தத்தை செயய எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

**மாற்கு 10:44**

**உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கும் தேவனே, நான் எப்போதும் உமக்கு பிரியமான பிள்ளையாக வாழும்படிக்கு, பெருமையை என்னைவிட்டு முற்றிலும் அகற்றிவிட பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

வெள்ளி | ஏப்ரல் 3

📖 மாலை வாசகம் – யோவான் 19:28–30

# 'எல்லாம் நிறைவேறிற்று'

ஆறாம் மணி நேரமுதல் ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. அதாவது உலகிலே இன்று குறிப்பிடப்படும் நேரப்படி, நண்பகல் *12* மணிதொடக்கம், பிற்பகல் மூன்று மணிவரை, இருளாயிருந்தது. பிதாவின் அநாதி தீர்மானத்தின்படி, மனித குலத்தை இரட்சிக்க இந்தப் பூமிக்கு வந்த தேவ குமாரனாகிய இயேசு, தீர்க்கதரிசிகள் முன்உரைத்த வாக்குகளை நிறைவேற்றி, சிலுவையிலே தொங்கிக் கொண்டிருந்தார். குறித்த வேளை வந்தபோது, தாம் செய்ய வேண்டிய யாவையும் செய்து முடித்தேன் என்று மீட்பராகிய இயேசு அறிந்து கொண்டார். எனினும், அவர் சிலுவையிலே தன் ஆவியை பிதாவவிடம் ஒப்படைக்க முன்பு, இன்னுமொரு வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாக இருந்தது. அதன்படிக்கு, "தாகமாயிருக்கிறேன்" என்றார். காடி நிறைந்த பாத்திரம் அங்கே வைக்கப்பட்டிருந்தது அவர்கள் கடற்காளானைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி, அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள். இயேசு காடியை வாங்கினபின்பு, எல்லாம் முடிந்தது என்று சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார். மரண தறுவாயிலும், அவர் ஒரு சிறிய வேதவாக்கியத்தைக் கூட விட்டு விடவில்லை. எல்லாவற்றையும் பூரணமாக நிறைவேற்றி முடித்தார். எல்லோராலும் கைவிடப்பட்டு, தனித்துவிடப் பட்ட வேளை மீட்பராகிய இயேசுவுக்கு வந்ததிருந்தது. அவரும் அவரோடு இருந்த சீஷர்கள் சுமார் மூன்றரை வருடங்களாக, பல ஊழியங்களை செய்து வந்தார்கள். ஆனாலும், அவர் தனியாக செய்ய வேண்டிய வேலையிருந்தது. கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர் தனித்து செல்ல வேண்டியதாயிருந்தது. எவரும் அணுகி அவருக்கு உதவி செய்ய முடியாதபடி ரோமருடைய போர்வீரர்கள் அவரை அந்த இடத்திற்கு நடத்தி சென்றார்கள். மனிதகுலத்தின் பாவத்தை சுமந்தவராக அவர், அந்த இடத்திற்கு சென்றார். பிதாவாகிய தேவனின் சித்தம் நிறைவேற வேண்டும் என்பதையே எண்ணமாக கொண்டு, தன்னை பார்த்து நகைத்து, பரிகாசம் பண்ணும் எவருக்கும் ஒன்றும் கூறுவில்லை. அந்த வேளையிலும். தம்மை கொடுமைப் படுத்துகின்றவர்களை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டார். நாமும் இந்த சிந்தையை தரித்தவர்களாக முன்னேறிச் செல்வோம்.

**மாற்கு 10:45**

**அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.**

**ஜெபம்**: என்மீது அன்புகூர்ந்த என் பிதாவாகிய தேவனே, என் ஆத்துமா பாதாளத்தில் இறங்காமல், இரட்சிப்படையும்படி உம்முடைய ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பி என்னை மீட்டதிற்காக உமக்கு நன்றி! இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாளை என்ன நடக்கும்?

“எல்லாம் முடிந்தது” என்று மீட்பராகிய இயேசுதாமே சொல்லி, தன் தலையைச் சாய்த்து, தன் ஆவியை பிதாவாகிய தேவனிடத்தில் ஒப்புக் கொடுத்தார். இந்த வார்த்தைகளின் கருப்பொருள் இன்னதென்பதை அவருடைய சீஷர்கள் அறியாதிருந்தார்கள். அவர்களோ, தங்கள் வாழ் விலே ஏற்பட்டிருக்கும் நெருக்கத்தினாலே இனி என்ன நடக்குமோ பய ந்து ஒளித்திருந்தார்கள். அவர்கள் இனி தங்கள் வாழ்விலே இருந்த நம் பிக்கை போய்விட்டது என்று துக்கமடைந்திருந்தார்கள். (லூக்கா 24:13-21). தங்கள் எஜ மானனாகிய இயேசு, “இஸ்ர வேலை மீட்டிரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம். இவைகள் சம்பவித்து இன்று மூன்று நாளாகிறது.” என்று எதிர் காலத்தைக் குறித்த நம்பிக்கையற்றவர்களாக இருந்தார்கள். சிலவேளைகளிலே, விசுவாசிகளுடைய வாழ்விலும், நம்பிக்கை இழந்து போகின்ற நிலைமைகள் உண்டாகிவிடுகின்றது. அவர்கள் தங்கள் வேலை செய்யும் இடத்திலே, வீட்டிலே, நம்பியிருந்தவர்கள் கைவிடும் போது நிர்கதியான நிலையை அடைகின்றார்கள். இனி என்ன என் வாழ்விலே எல்லாம் முடிந்தது என்று சொல்லிக் கொள்வார்கள். எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையற்றவர்களாக, இனி என்ன செய்வோம்? இனி என்ன நடக்கும் என்று ஏங்கி தவிக்கின்றார்கள். இந்த நிலைமைக்கு தள்ளப்படுவதற்கு அடிப்படை காரணம் என்ன? ஒரு விசுவாசியின் வாழ்க்கையானது விசுவாசம் என்னும் அத்திரவாரத்திலே கட்டப்பட்டிருக்கின்றது. அதை ஒரு விசுவாசி மறந்து தங்கள் வாழ்விலே நடக்கும் சம்பவங்களை ஆவிக்குரிய மனக்கண்களால் பார்க்காமல், மாம்ச கண்களால் பார்க்கும் போது, பயமும் திகிலும் அவர்களை பற்றிக் கொள்கின்றது. அக்காலத்திலே இருந்த சீஷர்களும், தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களாயிருந்தார்கள். மீட்பராகிய இயேசு மனித குலம் இரட்சிப்படையும்படிக்கு, அவர் பிதாவாகிய தேவனுடைய சித்த ப்படி செய்யவேண்டிய யாவற்றையும் செய்து முடித்து, எல்லாம் முடி ந்தது என்று கூறினார். எனவே, நம்பிக்கையற்ற நிலைமைகள் உங்கள் வாழ்விலே உண்டாகும் போது, வேத வாக்கியங்களை தியானியுங்கள். தேவனாகிய கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை பற்றிக் கொள்ளுங்கள். அவைளை அறிக்கை செய்யுங்கள். விசுவாசிகளாயிருங்கள்!

**யோவான் 14:1**

**உங்கள் இருதயம் கலங்காதிருப் பதாக; தேவனிடத்தில் விசுவாச மாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.**

**ஜெபம்:** பெலனற்ற வேளைகளிலே எனக்கு கிருபையை பொலியும் தேவனே, நம்பிக்கையற்ற நிலைகள் வாழ்விலே உண்டாகும் போது, நான் உம் வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜெயங்கொண்ட இயேசு நம்மோடிருக்கின்றார்

**யோவான் 20:20**

**சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.**

வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச் சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். ஆண்டவராகிய இயேசுதாமே தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களை தேற்றும்படிக்கு பற்பல காரியங்களை குறித்து அவர்களுக்கு கூறியிருந்தார்கள். “மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோ‘ப்படும் நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.” என்று கூறிய பிரகாரம், சீஷர்களடைய துக்கம் சந்தோஷமாக மாறியது. தங்கள் வாழ்க்கையிலே இனி என்ன நடக்கும் என்று நம்பிக்கையற்றிருந்தவர்கள், எல்லாம் முடிந்தது என்று தங்கள் எஜமானானனாகிய இயேசு சிலுவையிலே கூறிய வார்த்தையின் கருப்பொருயை உணர ஆரம்பித்தார்கள். சில வேளைகளிலே, விசுவாசிகளினுடைய வாழ்க்கையிலே, விசுவாசமானது சோதனைக்குட்படுத்தப்படும் போது, மனந்தளர்ந்து சோர்ந்து போய்விடுகின்றார்கள். சத்திய வார்த்தைகள் கொடுக்கப்பட்ட நோக்கத்தை மறந்து போய்விடுகின்றார்கள். சில சமயங்களிலே, இந்த உலகிலே உண்ணவும், குடிக்கவும், உடுத்தவுதற்காவே தேவ வார்த்தைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று எண்ணி, தேவ வார்த்தையின் கருப்பொருளை மறந்து போய்விடுகின்றார்கள். “என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். ஊலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்” என்று ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறினார். இந்த வார்த்தைகள் ஜீவனுள்ளது. மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்து ஆண்டவராகிய இயேசு தம்முடையவர்களோடு என்றென்றும் இருக்கின்றார். எனவே, நம்பிக்கையற்ற வேளைகளிலே, இயேசு கிறிஸ்துவிலிருந்த சிந்தையை தரித்துக் கொள்ளுங்கள். அவர் பிதா சொன்னவைகளை சொன்னபடி செய்தார். பிதவோ, அவருக்கு எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை கொடுத்தார். அதுபோல, உங்களுடைய நற்கிரியைகள் ஒன்றும் வீண் போவதில்லை. அவனவனுடைய கிரியைகளுக்கு தக்க பலனை தரும் தேவன் நம்க்கிருக்கின்றார்.

**ஜெபம்**: அநாதி ஸ்நேகத்தால் என்னை நேசித்த தேவனே, உம்முடைய அநாதி தீர்மானம் என்னிலே நிறைவேறும்படி உம்முடைய வார்த்தையிலே நான் எப்போதும் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசியாயிருங்கள்

விசுவாச வாழ்க்கையிலே அற்புதங்கள், அடையாளங்கள் நடப்பது உண்மையும் அவசியமானதொன்றாக இருக்கின்றது. ஆனால், அது விசுவாச வாழ்க்கையின் முழுமையல்ல, அது விசுவாச வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாக இருக்கின்றது. "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." என்று யோவான் 20ம் அதிகாரம் 30,31ம் வசனங்களிலே வாசிக்கின்றோம். ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே வாழ்ந்த நாட்களிலே, எத்தனையோ முறை படவிலே கடலை கடந்து சென்றார். ஆனால், எத்தனை முறை அவர் கடலின்மேல் நடந்து சென்றார்? அவர் நினைத்த நேரமெல்லாம், அவர் கடலிலே நடந்து செல்ல முடியும். ஒரு ஊரில் இருந்து இன்னுமொரு ஊருக்கு செல்வதற்கு, அவர் பிரயாணப்பட வேண்டியதில்லை. அவர் நினைத்தவுடன் அவர் வேண்டிய இடத்திற்கு ஒரு நொடிப் பொழுதில் சென்றிருக்க முடியும். ஆனால், சீஷர்கள் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவர்தான் வாக்களிக்கப்பட்ட மீட்பர் என்று விசுவாசிக்கும்படி, காற்றும், கடலும், இயற்கை யாவும் அவருக்கு கீழ்படிகின்றது என்பதை காண்பிக்கும்படி கடலையும், காற்றையும் அதட்டினார். கடல்மேல் நடந்து வந்தார். ஆனால், இன்று தங்களை விசுவாசிகள் என்று கூறிக் கொள்ளும் சிலர், தங்கள் வாழ்வில்கண்ட அற்புதங்களை மறந்து, தாங்கள் வேண்டிக் கொள்ளும் நேரம் எல்லாம் அற்புதங்கள், அடையாளங்கள் நடைபெறாதவிடத்து, ஆண்டவர் இயேவுவை விட்டு செல்ல ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார். வேத வார்த்தைகள் ஆராய்ந்து அதன் கருப்பொருளை அறியாத, ஆண்டவர் இயேசுவின் சீஷனாகிய தோமோ, அவரைகண்டால் மட்டும் போதாது, அவர் கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். உயிர்தெழுந்த ஆண்டவராகிய இயேசு அவனை மறுபடியும் சந்தித்த போது, அவனுடைய மனத்திருப்திக்காக தன் கைகளையும் விலாவையும் அவருக்கு காண்பித்து, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார்.

**யோவான் 20:29**

**நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.**

**ஜெபம்**: அதிசயமாய் என்னை நடத்துகின்ற தேவனே, பாவ சாபத்திலிருந்து என்னை மீட்டு, உம்முடைய ஆவியை எனக்கு தந்த பெரிதான அற்புதத்தை நான் ஒரு போதும் மறந்து போய்விடால் இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தண்டனைக்குரியவர்கள்

கடந்த சில வாரங்களாக, அநேக விசுவாசிகள், பற்பல ஒறுத்தல்கள், தியாகங்கள், தானதர்மங்கள், உபவாசங்கள் மற்றும் நீண்ட நேர ஜெபங்களை நடத்தி வந்தார்கள். சிலருடைய வாழ்க்கையிலே அத்தகைய செயல்கள், உயிர்த்த ஞாயிறு நினைவுகூருதலுடன் முடிவடைந்து விடுகின்றது. அவர்களில் சிலர், மறுபடியும் உலக போக்கின் வாழ்க்கைக்கு திரும்பிவிடுகின்றார்கள். தங்கள் ஆத்தமாவை விடுவிக்க தன் ஜீவனை கொடுத்த இயேசுவை மறந்து போய்விடுகின்றார்கள். குறிப்பாக சிலர், அந்நாட்கள் முடிந்த பின்புன், தொடர்ந்தும் பயபக்தியோடு, தேவ காரியங்களிலே ஈடுபட்டு வருகின்றார்கள். நீங்கள் அவர்களில் ஒருவராக இருந்தால், உங்கள் வாழ்க்கையை சற்று ஆராய்ந்து பாருங்கள். இன்னும் உங்கள் மனதிலே யாரையாவது குறித்து கசப்பு இருக்கின்றதா? நீதியான கசப்பு, நியாயமான வெறுப்பு என்ற பதங்கள் கிறிஸ்துவின் சிந்தையை தரித்த வர்களுக்கு இருக்க முடியாது. கடந்த சில நாட்களாக, கிறிஸ்துவின் சிந்தையை தரித்திருப்பதைக் குறித்து நாங்கள் தியானித்து வருகின்றோம். உங்களுக்கு எதிராக ஒருவன் குற்றம் ஒன்றை செய்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம். அந்த குற்றும் உலக நீதி நியாயத்தின்படியும், வேதத்தின் நியமனங்களின்படியும் தண்டிக்கப்படகூடிய குற்றம். அந்த மனிதனை தண்டிப்பதற்கு, உங்களிடம் பெலலும் செல்வாக்கும் உண்டு. நீங்கள் அந்த மனிதனை தண்டித்தால், உங்களை குற்றம் பிடிக்க யாரும் முன்வர மாட்டார்கள். அப்படி நீங்கள் அந்த மனிதனை தண்டித்தால், பலர் முன்னிலையில் நீங்கள் நீதியை நடப்பித்தீர்கள் என்று உங்களை பாராட்ட மனிதர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் என்ன செய்வீர்கள்? ஆண்டவராகிய இயேசுதாமே, சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடிய பொருளாக எண்ணாமல், நீதி நியாயத்தின்படி நித்திய ஆக்கினைக்கு பாத்திரராகிய என்னையும் உங்களை இரட்சிக்க தம்மை தாழ்த்தினார். ஒருவேளை கசப்பை உடனடியாக விட்டுவிட முடியாமல் இருக்கலாம். எப்படி சமாதானத்தை ஏற்படுத்துவது என்று வழி தெரியாதிருக்கலாம். முதலாவதாக, கசப்பு என் வாழ்விற்கு ஆகாதது, பிரிவினை எனக்குரி தல்ல என்பதை உங்கள் மனதிலே ஏற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது சத்திய ஆவியானவர்தாமே நீங்கள் செய்ய வேண்டிய காரியங்களை நடப்பிக்க வேண்டிய பெலனைத் தருவார். போக்கை உண்டு பண்ணுவார்.

**எபேசியர் 4:31**

**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது.**

**ஜெபம்:** பிதாவாகிய என் தேவனே, நான்இருளிலே இருந்து இருளிலே நடக்கின்றவனாக இருக்காதபடிக்கும், பகைமையைகுறித்துமேன்மை பாராட்டாதபடிக்கும், உம்முடைய வழியிலே நடக்க உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனநிறைவுடனான பணி!

நீங்கள் நேசிக்கின்ற உங்கள் பிள்ளைகள், வீட்டிலே உங்களுக்கு உதவியாக வேலைகளை செய்யும் போது நீங்கள் அவர்களைக் குறித்து பெருமையடைவீர்கள் அல்லவா? ஆம், எந்த பெற்றோருக்கும் அது பெருமையாக இருக்கும். ஆனால், உங்கள் பிள்ளைகளில் ஒருவன், நற்கிரியைகளை நடப்பிக்கும் போது, எப்போது தன் சகோதரர்கள் தன்னைப் போல வேலை செய்யதில்லை. ஆனால், அவர்கள் நான் சாப்பிடுவதைப் போல சாப்பிடுகின் றார்கள். அவர்களை நீங்கள் ஏன் தண்டிக்க முடியாது. நான் என் ஏன் அவர்களுடைய வேலையை செய்ய வேண்டும். என்று ஓயாமல் முறுமு றுத்துக் கொண்டே நற்கிரியைகளை செய்து வந்தால், நாளடைவிலே நீங் கள் அந்தப் பிள்ளைப் பார்த்து என்ன கூறுவீர்கள். மகனே, மகனே, இனி போதும், நீ நன்மை செய்யாமல் இரு ந்தாலே இந்த வீடு சமாதானமாக இருக்கும் என்று கூற மாட்டீர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள். சில விசுவாசிகள், அநேக நற்கிரியைகளை செய்து வந்தால், அந்த நற்கிரியைகளின் வாசனையை கெடுத்துப் போடு கின்றார்கள். ஒருவர் சுவையான உணவை சமைத்துக் பரிமாரனனார். அந்த உணவை மற்றவர்கள் வாய்குள் போட்டு, ருசிபார்பதற்கு முன்னரே, சமைத்தவரின் வாயின் பேச்சு, அந்த உணவை வாந்தியாக மாற்றிவிடுகின்றது ஒப்பாகவே சிலரின் நற்கிரியைகளும் இருக்கின்றது. அப்போஸ்தலரா கிய பவுல், பிலிப்பி சபையோருக்கு எழுதும் போது, நீங்கள் ஜீவ வசனத்தை அறிந்திருக்கின்றீர்கள். அதைப் பிடித்துக் கொண்டு உலக த்திலே நீங்கள் சுடர்களை போல பிரகாசிக்கின்றீர்கள். அநீதி நிறைந்த உலகத்திலே நீங்கள் குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், மாசில்லாத தேவ பிள்ளைகளாய் இருக்கும்படிக்கு, நீங்கள் நாவை காத்துக் கொள் ளுங்கள் என்று அறிவுரை கூறியிருக்கின்றார். மேலும், நீங்கள் கற்றுக் கொண்டதும், செய்துவருகின்றதுமான கிரியைகள் உங்களுக்கும் மற்ற வர்களுக்கு நற்பலலை தரும்படிக்கு, மற்றவர்களின் குறைவுகளைக் குறித்து முறுமுறுக்காமலும், மற்றவர்களுடைய அசதியைக்குறித்து வாக் குவாதம் செய்யாமலும் இருங்கள் என்று எச்சரிக்கை விடுத்திருக்கி ன்றார். அப்படி செய்யும் போது, தான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருக்கும் என்று கூறியிருக்கின்றார். எனவே, கிறிஸ்துவைப் போல மனநிறைவுடன் சேவை செய்யுங்கள்.

**பிலிப்பியர் 2:16**

எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கொன்று என்னை அழைத்த தேவனே, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், உமக்கென்று மனப்பூர்வமாய்ச் செய்ய எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# இருதயமும் வாயும்

ஒரு கிராமத்திலே வசித்து வந்த விதவையாக இருந்த தாயார், தன் ஒரே மகனானவனின் எதிர்காலத்திற்காக அயராது உழைத்து வந்தாள். மகனாவனும் வளர்ந்து உயர்கல்வியை முடித்து, மேற்படிக்காக பட்டண த்திலுள்ள பல்கலைகழகத்திற்கு சென்று, அதி விசேஷட சித்தியுடன் பட்டப்படிப்பை முடித்து, நல்ல உத்தியோகத்திலே உயர் பதவியிலே அமர்ந்து கொண்டான். ஒருநான் அவனை சந்திக்கும்படிகயாக தயார் பட்டணத்திற்கு சென்றிருந்தாள். அவளுடைய எளிமையான வாழ்க்கையினாலும்,வறுமையினாலும்,கடின உழைப்பினாலும், அவளுடைய தோற்றும் விரும்பத்தக்கதாக இல்லாதிருந்தது. தாயாரை கண்ட, மகனானவன், சற்று தயமடைந்தான். சக ஊழியர் மத்தியிலே அவளை தன் தாயார் என்று கூறாமல், வீட்டிலே உதவிக்காக இருக்கும் உறவினர் என்று கூறிக்கொண்டான். இதற்கொத்த சம்பவங்கள் நடைபெற்றதை நீங்களும் அறிந்திருக்கலாம். மேற்கூறிய சம்பவத்திலே, அந்த மகனாவனின் மனம் நல்லதல்ல என்று கூறிவீர்களா? அல்லது அவன் வாயின் வார்த்தை சரியில்லை என்று கூறுவீர்களா? சற்று சிந்தித்துப் பாருங்கள். நல்லமனம் இல்லாதவர்கள், சிலவேளைகளிலே மற்றவர்கள் முன்னிலையிலே நல்ல நடிகர்களாக மாறிவிடுகின்றார்கள். அவ்வண்ணமாக தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக் கொண்டு, மாய்மாலமான வாழ்க்கை வாழ்பவர்களும், தங்கள் வாயின் வார்த்தைகளினாலே மனம்குளிர பேசுகின்றவர்களைப் போல இனிமையான வார்த்தைகளை பேசிக் கொள்ளலாம். ஆனால், ஒருநாள் மனதிலுள்ளவைகள் வாயினாலே வெளிப்படும். இப்படியாக சொந்தக் குடும்பத்தை மட்டுமல்ல, தங்களுக்காக தன் ஜீவனைக் கொடுத்த இயேசுவையும் தங்கள் சொந்த இரட்சகர் என்று மற்றவர்கள் முன் அறிக்கை செய்ய வெட்கடைவர்களும் உண்டு. உலகத்தார் முன்னிலையில் அவர்களுக்கு ஏற்றபடி பேசிக் கொள்வார்கள். இது கபடுள்ள வாழ்க்கை. மாசு நிறைந்த உள்ளம். சில வேளைகளிலே, "அவன் நல்லவன் ஆனால் அவன் வாய்சரியில்லை" என்று விசுவாசிகள் கூறுவதை கேட்டிருப்பீர்கள். நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான் பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான். இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். எனவே உங்கள் இருதயமானது கிறிஸ்துவைப் போல மனத்தாழ்மையும், கீழ்படிவுள்ளதாகவும் இருப்பதாக.

**லூக்கா 6:45**

**இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.**

**ஜெபம்**: உள்ளந்திரியங்களை ஆராய்து அறியும் தேவனே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானங்களும் உமது சமுகத்திலே ஏற்புடையதாக இருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ பக்தியுள்ளவர்கள் யார்?

அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பித்தார். ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான் அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான். என்று யாக்கோபு 1ம் அதிகாரதிலே வாசிக்கின்றோம். இந்த வசனங்களை சற்று ஆராய்ந்து பாருங்கள். சில குறிப்புக்களைப் பார்போம். ஒன்று: நாம் சத்திய வசனத்தினாலே மறுபடி ஜெநிப்பிக்கப்பட்டோம். இரண்டு: அந்த வசனத்தை கேட்கவும் அனதன்படி செய்யவும் ஆவலுள்ளவர்களாக இருக்க வேண்டும். மூன்று: வாயின் வார்த்தையைக் குறித்த எச்சரிக்கை அதாவது, கோபத்தை அடக்க வேண்டும். பொறுமையோடு பேச வேண்டும். பிரியமானவர்களே, கேட்ட வார்த்தைகளுக்கேற்ப கிரியைகள் காணப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, ஒருவன் கிரியைகளை நடப்பித்தும், தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். எனவே, தேவ வசனத்தின்படி நற்கிரியைகளை செய்து கொண்டு, திருவசனத்திற்கு எதிரான முறுமுறுப்புக்களையும், வாக்குவாதங்களையும் விட்டுவிடுங்கள்.

**யாக்கோபு 1:26**

**உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்.**

**ஜெபம்**: உம் வார்த்தையால் என்னை உருவாக்கிய தேவனே, உம்முடைய வார்த்தைக்கு விரோதமான பேச்சுக்களையும், செய்கைகளையும் நான் விட்டுவிட பிரகாரமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுகந்த வாசனையாக ஒப்புக்கொடுங்கள்

பழைய ஏற்பாட்டின் நாட்களிலே, தேவனாகிய கர்த்தர் பலிகளை குறித்து கூறும் போது, ஆட்டுக்குட்டி, ஆட்டுக்கடா மற்றும் காளையை பலியான செலுத்தும் போது, அந்தப் பலிப்பீடத்தண்டையிலே பானபலியாக, திராட்சை இரசமானது வார்க்கப்பட வேண்டும் என்று கூறினார். ஒருவன் மனதார அதைச் செய்யும் போது, அது கர்த்தருக்கு சுகந்த வாசனையாக இருக்கும். இந்த கிரியையானது, ஒருவன் தேவனுக்கு ஆராதனையாக தன்னை அர்ப்பணிப்பதின் அடையாளமாக இருக்கும். தேவ ஊழியராகிய பவுல், சிறையிலிருந்து, பிலிப்பியசபைக்கு எழுதும் போது, "மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப் போனாலும், நான் மகிழ்ந்து, உங்கள னைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்." என்று கூறினார். இதற்கு முன்னதாக, "தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாக இருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்" என்று கூறிய அவர், இப்போது, தன்னுடைய வாழ்க்கையின் முடிவானது, மற்றவர்களை தேவனுக்கு ஆதயத்படுத்தும், தேவ சேவையிலே முடிந்து போனாதும், அதை முறுப்முறுப்போடல்ல, அரை மனதோடல்ல, சந்தோஷத்தோடே தேவனுக்கு சுகந்த வாசனையாக தன் வாழ்க்கைகை ஒப்புக் கொடுப்பேன் என்று கூறுகின்றார். தேவ ஊழியராகிய அவர், சிறையிலிருப்பதற்கு எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை. மாறாக, மற்றவர்கள் நித்திய ஜீவனை அடைய வேண்டும் என்பதற்காக, கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்து வந்தார். அதனால், அவர்மேல் கோபமடைந்த அதிகாரிகள், தவறான குற்றச்சாட்டாடுகளை அவர்மேல் சுமத்தி, அவரை சிறையிலிட்டிருந்தார்கள். அந்த நிலைமையிலும், தேவனுக்காக தான் தீங்கநுபவி ப்பதை சந்தோஷத்தோடே ஏற்றுக் கொண்டார். தனக்கு நீதியின் கீரிடம் உண்டு என்பதை அவர் நிச்சயித்திருந்தார். அதுமட்டுமல்ல, அந்த கீரிடத்தை பெறும் நாளிலே, இன்னும் அதிக மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் தனக்கு உண்டாயிருக்கும்படிக்கு, பிலிப்பிய சபையிலுள்ள விசுவாசிகளும், உபத்திரவங்கள் பாடுகள் மத்தியிலே, முறுமுறுப் பையும், வாக்குவாதங்களைவிட்டு, சந்தோஷத்தோடே தேவனுக்கு சேவை செய்யும்படி தங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையுள்ளவராக இருந்தார். அதுபோலவே, உங்கள் நற்கிரியைகள் தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கும்படி முறுமுறுப்பில்லாமல், முழுமனதோடே செய்யுங்கள்.

**எண்ணாகமம் 15:7**

**கர்த்தருக்குச் சுகந்த வாசனையான படைப்பாகப் படைக்கவேண்டும்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்தறிகின்ற தேவனே, அசதியாய், மனகசப்போடு நற்கிரியைகளை செய்யாமல், உம்முடைய நாமத்தினிமித்தம் முழுமனதோடும் சந்தோஷத்தோடும் நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | ஏப்ரல் 12 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 2:15 –16

# மனத்தெளிவுள்ளவர்களாக இருங்கள்

தேவ ஊழியராகிய பவுல், தீமோத்தேயு என்னும் இளவயதுள்ள தேவ ஊழியனுக்கு எழுதும் போது: நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள் ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. ஏனென்றால், நான் இப்பொழுதே பான பலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன் நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட் டத்தைப் போராடினேன், ஓட்டத் தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக் கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியா யாதிபதியாகிய கர்த்தர் அந்நா ளிலே அதை எனக்குத் தந்தருளு வார் எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளு வார் என்று கூறினார். தேவன் நமக்கு தெளிந்து புத்தியுள்ள ஆவியை தந்திருக்கின்றார். நாம் காற்றினால் அடிபட்டு அலைகின்ற அலைகளைப் போல அங்குமிங்குமாக அலைந்து திரியாமலும், நாளுக்கு நாள் மாறும் செழிப்பின் உபதேசங்களை பின்பற்றி, வழிதப்பிப்போய்விடாதபடி க்கும், சகல சத்தியத்திலும் வழிநடத்தும் ஆவியானவரை நமக்கு கொடு த்திருக்கின்றார். வேதப்புரட்டவர்கள் “ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்கமனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச் சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதை களுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்” என்று முன்னறிவித்த தேவ ஊழியரா கிய பவுல், மேற்கூறியதை, தீமோத்தேயுவுக்கு அறிவுரையாக கூறா மல், பிதாவாகிய தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிற வர்க ளையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயே சுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவ ருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிட்டு கூறினார். ஆண்டவராகிய இயேசுவும் தம்மை சுகந்த வாசனையான பானபலியாக் பிதாவாகிய தேவனுக்கு ஒப்புக் கொடுத்தார். அது போல, நீங்களும் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை நீடிய பொறுமையோடி நிறைவேற்றி, உங்களை பிதாவாகிய தேவனுக்கு சுகந்த வாசனையான பலிகளை செலுத்துங்கள். தெளிந்த புத்தியோடு, வேத வார்த்தைகளை தியானித்து, அந்த வார்த்தையின் வழியிலே வாழுங்கள்.

**2 தீமோத்தேயு 4:5**

**நீயோ எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கநு பவி, சுவிசேஷகனுடைய வே லையைச் செய், உன் ஊழிய த்தை நிறைவேற்று.**

**ஜெபம்**: பரலோக தேவனே, மாறிப்போகும் இந்த உலகிலே, நான் உம்மு டைய சத்தியத்தைவிட்டு வழுவிச் செல்லாமல், தெளிந்து புத்தியுள்ள வானாக காரியங்களை நிதானித்தறிய எனக்கு பிரகாசமுள்ள மனக்கண் களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்

# தேவனுக்கு உகந்த பலி

அக்காலத்திலே வாழ்ந்து ஆண்டவர் இயேசுவினால் தெரிந்தெடுக்கப் பட்ட சீஷர்கள், இயேசுவின் இரத்த சாட்சிகளாக மரித்தார்கள். தேவ ஊழி யராகிய பவுல் கூறியதைப் போல, "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்" என்ற பிரகாரமாக, தங்களுக்காக தம் ஜீவ னைக் கொடுத்த தங்கள் எஜமானனாகிய இயேசுவிற்காக சந்தோஷ த்தோடே தங்கள் ஜீவனையும் கொடுத் தார்கள். "சிலர் நிந்தைகளையும் அடி களையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள் கல்லெறியுண்டார் கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட் சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தி னாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த் துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்" என்று பரிசுத்த வே தாகமத்திலே வாசிக்கின்றோம். இந்நா ட்களிலே, பெரும்பான்மையான விசுவாசிகள், சுவிசேஷத்திற்காக அத்த கைய பாடுகளை படும்பம்படியான நிலைக்கு தள்ளப்படவில்லை. சுதந் திரத்தோடு ஆண்டவர் இயேசுவை சேவிக்கும்படியாக சிலாக்கியத்தை பெற்றிருக்கின்றார்கள். அப்படியிருந்ததும், ஒரு சிலர், தாங்கள் பெற்றி ருக்கும் சுதந்திரத்தை தங்கள் இச்சைகளை நிறைவேற்றி, அதை நியா யப்படுத்தும்படி, வேத பிரணமாணங்களை புரட்டுகின்றார்கள். நீங்கள் ஆண்டவர் இயேசுவுக்காக தீங்கநுபவிக்கும்படி ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றீர்களா? உங்களை குறித்து மற்றயவர்கள் காரணமின்றி அவதூறு பேசும் போது, குடும்பத்திலே, சபையிலே, வேலை செய்யும் இடங்களிலே கலகங்களை ஏற்படுத்தாமல, அதை சகித்துக் கொண்டு, உங்களை தேவனிடத்தில் ஒப்படைக்க ஆயத்தமுள்ளவர்களாக இருக்கி ன்றீர்களா? அல்லது உடனடியாக உங்கள் மாம்ச இச்சையாகிய சுயநீதி நிறைவேற்றப்பட வேண்டும் என்று தீர்மானித்தவர்களாக பிரிவினை களுக்கு காரணராக மாறிவிடுகின்றீர்களா? பிரியமானவர்களே, அநியாய ங்களை நடப்பிக்கின்றவர்களில் யார் தேவநீதிக்கு தப்பிப் போக முடி யும்? தன் கட்டுப்பாட்டிலிருக்கும் மாம்ச இச்சைகளை சிலுவையிலே அறைய ஆயத்தமில்லாதவன், எப்படி உபத்திரவத்திர காலத்திலே சத்தி யத்திலே நிலைநிற்பான்? உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள்.

**கலாத்தியர் 5:13**

**சகோதரரே, நீங்கள் சுயா தீனத்திற்கு அழைக்கப்பட் டீர்கள், இந்தச் சுயாதீன த்தை நீங்கள் மாம்சத்திற் கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக் கொருவர் ஊழியஞ்செய் யுங்கள்.**

**ஜெபம்:** என்னை மறுபடி ஜெநிப்பித்த தேவனே, நான் பெற்றுக் கொண்ட சுயாதீனத்தை, என் இச்சைகளை நிறைவேற்றும்படி அனுரியா மல், உம்முடைய திருச் சித்தத்தை நிறைவேற்றுகின்றவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவை மாதிரியாக கொண்டிருங்கள்

பிலிப்பியருக்குஎழுதின நிருபத்தில், இரண்டாம் அதிகாரத்திலுள்ள கடைசிப்பகுதியை நாம் தியானித்து வருகின்றோம். அந்த அதிகாரத்தின் ஆரம்பத்திலே, ஐக்கியம், ஏக சிந்தை, ஏக அன்பு, இசைந்த ஆத்துமாக்களாக இருங்கள் என்று தேவ ஊழியராகிய பவுல் குறிப்பிட்டிருக்கின்றதை நாம் தியானித்தோம். ஏன் அப்படி இருக்க வேண்டும்? இந்த உலகத்திலுள்ளவர்கள் அப்படியாக ஏக சிந்தை, ஏகஅன்புள்ளவர்களாக இருப்பதினாலோ? இல்லை. நீங்கள் கோணலும் மாறுபாடுமான உலகத்திலே வாழ்ந்து வருகின்றோம். அப்படியானால், ஏன் நாம் ஐக்கியத்தோடு, ஏகசிந்தை, ஏக அன்பு, இசைந்தஆத்துமாக்களாக இருக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் நாளிலே, தேவ சித்தத்தை நிறைவேற்றினவர்களாகவும், மாசற்ற பிள்ளைகளாகவும் காணப்பட வேண்டும். அதன் பொருட்டு, கிறிஸ்துவின் சிந்தையை தரிக்க வேண்டும் என்பதை குறிப்பிட்டிருக்கின்றார். தேவ ஊழியராகிய பவுலின் நாட்களுக்கு முன்பாக வாழ்ந்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை குறித்து கூறாமலும், பிரதான சீஷனாகிய பேதுருவை பற்றிக் கூறாமலும், கிறிஸ்துவை மாதிரியாக வைத்து, அவருடைய பாதச்சுவடுளை பின்பற்றும்படியாக கூறியிருக்கின்றார். இன்று சிலர், இந்த உலகத்திலே பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்திருக்கும் பரிசுத்தவான்களை தங்களுக்கு மத்தியஸ்தராக ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியாக ஏற்படுத்தினாலும், அந்த பரிசுத்தவான்கள் செய்தவைகளை பின்பற்றுவதில்லை. அவர்கள் எப்படி தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தார்கள்? அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையை தரித்துக் கொண்டார்கள். ஆனால் இன்று சபைகளிலே, சிலர் நான் பவுலை சேர்ந்தவனும், நான் பேதுருவை சேர்ந்தவனென்றும் தங்களுக்குள்ளே பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். நாமோ, அப்படியிராமல், கிறிஸ்துவை மாதிரியாக கொண்டு வாழ வேண்டும். குழப்பத்தின் நாட்களிலே, பெற்றோர் எதை செய்து காண்பிக்கின்றார்களோ, பொதுவாக அதையே பிள்ளைகள் தங்கள் குழப்பத்தின் நாட்களிலே பின்பற்றுவார்கள். எனவே, உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். விசுவாசிகளின் வாழ்க்கையானது தேவனுக்கு உகந்த காணிக்கையாக காணப்பட வேண்டும். கடந்த கால தவறுகளிலே நிலைநிற்காமல், கிறிஸ்துவின் சுபாவங்கள் நாளுக்கு நாள் பெருகும்படி முன்னேறிச் செல்லுங்கள். சத்திய ஆவியானவர் உதவி செய்வார்.

**1 பேதுரு 2:19**

ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும்.

**ஜெபம்**: நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, நான் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்த்து உமக்கு முன்பாக பிரியமுள்ள ஆத்துமாவாக காணப்பட என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கிறிஸ்துவை சேர்ந்தவர்கள்...

பொதுவாக வாழ்வில் இலட்சியத்தோடு வாழும் மனிதர்கள் தங்களுக் கென்று ஒரு வழிகாட்டியை வைத்திருப்பார்கள். எடுத்துக்காட்டாக, பிள்ளைகள் பெற்றோரை அல்லது ஒரு மூத்த சகோதரை, மாணவர்கள் தங்களுக்கு பிரியமான ஆசிரியர் ஒருவரை, விசுவாசிகள் தங்களுக்கு பிடித்த போதகரை, இப்படியாக நம்பிக்கைக்குரிய அறிவுரையா ளர் களை, உடனிருந்து உதவுபவரை (Mentor or Mentorship) ஏற்படுத்திக் கொள்வார்கள். "தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினை த்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவ ர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" என்றும் "ஆலோசனையி ல்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள் அநேக ஆலோசனை க்காரர் உண்டானால் சுகம் உண்டாகும்." என்றும் பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அதாவது, தேவனுக்கு பயந்து அவர் வழியிலே வாழ்பவர்களின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது நல்லது. முத லாவது, ஆலோசகர்கள் யாரைப் பின்பற்றுகின்றார்கள் என்பதை அறி ந்து கொள்ள வேண்டும். பரிசுத்த வேதாகமம் கூறுவதைப் போல் பர லோகத்திற்கு செல்லும் ஒரே வழியாகிய ஆண்டவர் இயேசுவை அவர் கள் பின்பற்றியிருந்தால், அவர்களுடைய ஆலோசனைகளும் பரலோக த்திற்குரியவைகளாக இருக்கும். ஆனால், ஆண்டவர் இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாமல், வேறு வழிகளை பின்பற்று கின்றவர்களின் ஆலோசனையானது, ஆலோசகர்கள் சென்றடையும் இடத்திற்கே இட்டுச் செல்லும். அக்காலத்திலே, கொரிந்து என்னும் சபை யிலே, பாகுபாடுகளும், பிரிவினைகளும் உண்டாயிற்று. எப்படியெ ன்றால்: ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் இன்னுமொருவன் தான் பேதுருவை சேர்ந்தவனென்றும் மனுஷர்களைக் குறித்து மேன்மைபா ராட்டி தங்கள் ஆவிக்குரிய நிலைமையிலிருந்து விலகி மாம்சத்திற்குரிய எண்ணமுள்ளவர்களானார்கள். ஆதலால், தேவ ஊழியராகிய பவுல், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்று கிறவர்களாயிருங்கள் என்று தெளிவாக அறிவுரை கூறியிருக்கின்றார். தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்றவர்கள், மற்றவர்க ளையும் நித்திய வழியாகிய ஆண்டவர் இயேசுவினிடத்திலே நடத்துகி ன்றார்கள். எனவே, எப்போதும் ஆண்டவர் இயேசுவை உங்கள் மாதிரி யாக வைத்து முன்னேறிச் செல்லுங்கள்.

**1 கொரிந்தியர் 11:1**

**நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்.**

**ஜெபம்**: என்மீது அன்புகூர்ந்த தேவனே, நீர் இந்த உலகத்திற்கு அனுப்பிய உமது திருக்குமாரனாகிய மீட்பர் இயேசுவை நான் எப்போதும் பின்பற்று கின்றவனாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இயேசுவுக்குரியவைகளைத் தேடுங்கள்

**பிலிப்பியர் 2:21**

மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.

பிலிப்பு சபையோரின் விவகாரங்களைப் பற்றி அறிவும்படிக்கு தேவ ஊழியராகிய பவுல் ஆவலாக இருந்தார். அதன்பொருட்டு, உண்மையும் உத்தமுமான ஊழியானாகிய தீமோத்தேயுவை அவர்களிடம் அனுப்பும் தீர்மானித்திருந்தார். "அன்றியும், நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன். அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என் னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்." என்று கூறியிருக்கின்றார். தேவ ஊழியராகிய மனமானது, ஆண்டவர் இயேசுவை பற்றியிருந்தது. கிறிஸ்து இயேசுவையே அவர் தன் மாதிரியாக கொண்டிருந்தார். அதே பிரகாரமாக, தன்னோடு ஊழியம் செய்து வந்த தீமோத்தேயுவையும், தன்னைப்போல ஆண்டவர் இயேசுவை பற்றிக் கொள்ளும்படி பயிற்சிவித்தார். அந்நாட்களில் மாத்திரமல்ல, இந்த நாட்களிலும், நன்றாக ஊழியங்களை ஆரம்பிக்கின்றவர்கள், காலங்கள் கடந்து செல்லும் போது, நோக்கத்தை இழந்து போகின்றார்கள். தாங்கள் அடைய வேண்டிய இலக்கை மறந்து, இந்த பிரபஞ்சத்திற்குரியவைகளின்மேல் நாட்டம் கொண்விடுகின்றார்கள். தங்களுக்கானவைகளையும், தங்கள் சந்ததிக்கு தேவையானவைகளைும் சேர்த்து வைக்க முன்படுகின்றார்கள். ஆதலால், தீமோத்தேயுவுக்கு நிருபத்தை எழுதும் போது, உன்னை உண்மையுள்ளனென்று கருத்தி, இந்த உழியத்தை உனக்கு தந்தார் என்றும் மற்றவர்கள் இந்த உலகத்தின்மேல் ஆசை வைத்து இழுப்புண்டு போன பிரகாரம் நீயும் இழுப்புண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். இந்த சம்பத்திலே, நான் மறுபடியும், கிறிஸ்துவின் சிந்தையைக் குறித்து காண்கின்றோம். அந்நாட்களிலே ஊழியம் செய்து வந்த சிலர், உண்மையற்றவர்களாகவும், தங்களுக்குரியவைகளை தேடுகின்றவர்களாயும் இருந்தார்கள். ஆனால், தேவ ஊழியர்களாகிய பவுலும், தீமோத்தேயும், தேவனுக்குரியவைகளை நாடித் தேடுகின்றவர்களாக இருந்தார்கள். அதே பிரகாரமாக நாமும், தேவனுக்கு முன்பாக உண்மைத்துவம் உள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

**ஜெபம்**: உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலை அடையும்படி என்னை அழைத்த தேவனே, நான் ஒருபோதும் என் சுயவிருப்பத்தின்மேல் சாயாமல், எப்போதும் உணர்வுள்ளவான இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

# தேவனுடைய வீட்டார்!

“நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரி யாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” என்று எஜமானான் தன்னுடைய உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியனுக்கு கூறியதைப் போல, ஒருநாள் ஆண்டவர் இயேசுவும் உண்மையும் உத்தமமுள்ளவர்களை அழைத்துக் கொள்வார். “என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்.” என்று தேவனாகிய கர்த்தர் மோசேயைக் குறித்து சாட்சி பகர்ந்தார். இன்றைய நாட்களிலே யார் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றார்கள்? ஒருவேளை சிலர், தங்க ளை உண்மையுள்ளவர்கள் போல காண்பித்துக் கொள்ளலாம். வேறு சிலர், தங்கள் பேச்சினாலே உண்ஐமயுள்ளவர்கள் போல காணப்படுவார்கள். ஆனால், உண்மையாய் தேவனுடைய வீட்டை விசாரிக்கின்றவன் யார்? அவனவன் தன்னை தேவ வார்த்தையின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பார்தால், அவன் தேவனுடைய நாளிலே பிரயோஜனமற்றவனாக காணப்படாமல், அவர் முன்னிலையிலே உண்மையுள்ளவனாக காணப்படுவான். அன்றைய நாட்களிலே தேவ ஊழியராகிய பவுலோடு வேறு சில ஊழியர்களும் தங்களை ஊழயிர்கள் போல காண்பித்துக் கொள்பவர்களும் இருந்திருக்கலாம். ஏனெனில், பிலியப்பியருக்கு எழுத் தின நிரூபத்தின் ஆரம்பத்திலே, “சிலர் பொறாமையினாலும் விரோதத்தி னாலும், சிலர் நல்மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையுங்கூட்ட நினைத்து, சுத்தமனதோடே கிறிஸ்துவை அறிவியாமல், விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள்.” என்று கூறியிருக்கின்றார். ஆனால், தன்னோடிருந்த தீமோத்தேயு என்னும் வாலிபன், உண்மையுள்ளவனாக இருப்பதை கண்டு கொண்டார். ஜெபம் பண்ணும்படியாக தேவ ஆலயத்திற்கு சென்ற பரிசேயனையும் ஆயக்காரனையும் குறித்து அறிந்திருப்பீர்கள். பரிசேயன் தான் நீதிமான் என்று தனக்குள்ள எண்ணிக் கொண்டான். ஆனால், அவனுடைய இருதயமோ தேவனுக்கு முன்பாக நீதியாக காணப்படவில்லை. உங்கள் இருதயம் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கின்றது? “சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவரு டைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். நாமும் உண்மையுள்ளவர்களாக இருந்தால், தேவனுடைய வீட்டாராய் காணப்படுவோம்.

**எபிரெயர் 3:5**

**மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்தறிகிற தேவனே, என் இருதயம் உமக்கு முன்பாக, உண்மையும் உத்தமமுமான விசுவாசியாக உமக்கு முன்பாக காணப்பட எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# 'தேவ வசனமே சத்தியம்'

உங்களிலுள்ள மூப்பருக்கு உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்திசொல்லுகிறதென்னவென்றால்: உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள் என்று தேவ ஊழியராகிய பேதுரு கூறியிருக்கின்றார். மகிமையின் கிரீடமானது தேவ ஊழியர்களுக்கு மட்டுமல்ல, பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றும் யாரும் அதைப் பெற்றுக் கொள்வார்கள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடி த்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார் எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்." என்று தேவ ஊழியராகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் நிருபத்தில் கூறியிருக்கின்றார். அவருடைய பிரசன்னத்தை விரும்புகின்றவர்கள் யாவரும், அவர்கள் ஊழியர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும், அவர்கள் தங்கள் வாழ்க்கையிலே, தேவனுடைய ராஜ்யத்திற்கும் அதன் நீதியை தேடுவதற்கும் முதலிடம் கொடுக்கின்றவர்களாக காணப்படுவார்கள். ஆனால், இன்று, சில விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே கல்வி, வேலை, ஆஸ்திகள் என்று அவைகளையே நாடித் தேடுகின்றார்கள். சில இடங்களிலே, ஆண்டவராகிய இயேசு தம்முடைய ஜீவனைக் கொடுத்து சம்பாதித்த ஆத்துமாக்களைவிட சபைக் கட்டிடங்கள், செயற்திட்டங்கள், இலக்கங்கள் அதிக முக்கியத்துவத்தை பெற்றுவிடுகின்றது. இப்படியாக, ஊழியர்களில் சிலரும், விசுவாசிகளில் சிலரும் தேவனுக்கு முன்பாக தங்கள் வாழ்வின் சாட்சியை இழந்து உண்மையற்றவர்களாக மாறிவிடுகின்றார்கள். சத்தியத்திலே நிலைத்திருக்கின்றவர்கள் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக பேச்சிலும் செய்கையிலும் உண்மையுள்ளவர்களாக காணப்படுவார்கள்.

**யோவான் 17:17**

**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்**

**ஜெபம்**: அழிவில்லாத ராஜ்யத்திற்கென்று என்னை அழைத்த தேவனே, சத்திய வேதத்திலே நான் எப்போதும் நிலைத்திருந்து கனிகொடுக்கும் உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர்இயேசு வழியாக ஜெபிக்கிறேன்ஆமேன்.

# உத்தம குணமுடையவர்கள்...

சில வேளைகளிலே, பாடசாலைகளிலே, வேலை செய்யும் இடங்களிலே, தானதர்மங்களுக்கென்று ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனங்களிலே நடைபெறும் சம்பவங்களை செய்திகள் கேள்விப்படும்போது மனிதர்களுடைய மனங்கள் சோர்ந்து போய்விடுகின்றது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட சில ஆசிரியர்களின் தகாத நடவடிக்கைகளால், இனி ஆசிரியர்களை எவரையும் நம்ப முடியாது எனவே பாடசாலைகள் தேவையில்லை என்று கூறிவிட முடியுமா? அப்படி கூற முடியாது. ஏனெனில் எங்களில் அநேகருக்கு, நல்ல ஆசிரியர்களை குறித்த சாட்சிகள் உண்டு. எப்படியாக, அவர்கள் மாணவர்களின் வாழ்க்கையை நன்மைகேதுவாக மாற்றினார்கள். பணத்தை குறித்த ஆசையில்லாமல் எத்தனை தியாகங்களை செய்து, மாணவர்களின் கல்வி ஆளுமைகளை வளர்த்தார்கள் என்பதை அறிந்திக்கின்றோம். அவ்வண்ணமாகவே, ஆதி அப்போஸ்தலர்கள் ஊழியங்களை நடப்பிக்கும் போதும், சில உண்மையற்ற ஊழியர்கள் இருந்தார்கள். அதனால், தேவனுடைய ஊழியம் தடைபட்டுப் போகவில்லை. அவர்கள் மத்தியிலே உண்மையும் உத்தமுமாக ஊழியங்களை செய்பவர்கள் இருந்தார்கள். தேவ ஊழியராகிய பவுல் தன்னுடனே இருந்த ஒரு சில ஊழியர்களைக் குறித்து சாட்சியாக கூறும் போது: தீமோத்தேயு, தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள். ஆகையால் என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்ப லாமென்று நினைத்திருக்கிறேன் என்று கூறியிருக்கின்றார். அன்று மட்டுமல்ல இன்றும் கோணலும் மாறுபாடுமான சந்தததியின் நடுவிலே, பொருளாசையில்லாமல், உண்மையும் உத்தமுமாக ஊழியங்களை செய்கின்றவர்களை கர்த்தர் தனக்காக வேறு பிரித்து வைத்திருக்கி ன்றார். பிரியமானவர்களே, சத்திய வேதத்தை வாசித்து தியானியுங்கள். சத்திய ஆவியானவரின் துணையை நாடுங்கள். வேதனை உண்டாக்கும் வழிகள் உண்டோ என்று உங்கள் இருதயத்தை தேவ வசனத்தின் வெளிச்சத்திலே ஆராய்ந்து பாருங்கள். உங்கள் குடும்பத்தை ஆராய்ந்து பாருங்கள். வெளியிடங்களிலே நடக்கும் அநியாயங்கள் அக்கிரமங்களினால் நீங்கள் சத்தியத்தைவிட்டு விலகிச் செல்லாமல், தேவ வசனத்தை பிடித்துக் கொண்டு சுடர்விடுங்கள்.

**பிலிப்பியர் 2:22**

**தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசே ஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தமகுணத்தை அறிந்திருக்கிறீர்கள்.**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, உலகத்திலே நடக்கும் அநியாயங்களை கண்டு, நான் சோர்ந்து போய் சத்தியத்தைவிட்டு விலகிப்போகாதபடிக்கு நீர் என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உத்தம ஊழியம் செய்பவர்கள்

அக்காலத்திலே, சுவிசேஷத்திற்காக உண்மையும் உத்தமமுமாக உழைத்த ஊழியர்களின் ஐக்கியத்தை குறித்து இன்று தியானிப்போம். தேவ ஊழியராகிய பவுல், பிலிப்பியருக்கு எழுதிய நிரூபத்தின் இரண்டாம் அதிகாரத்தின் கடைசிப் பகுதியிலே, எப்பாப்பிரோதீத்து என்னும் ஊழியரைக்கு குறித்து கூறும் போது: "மேலும், என் சகோதரனும், உடன்வேலையாளும், உடன்சேவகனும், உங்கள் ஸ்தானாபதியும், என் குறைச்சலுக்கு உதவிசெய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை உங்களிடத்தில் அனுப்பவேண்டுமென்று எண்ணினேன். அவன் உங்கள் எல்லார்மேலும் வாஞ்சையுள்ளவனும், தான் வியாதிப்பட்டதை நீங்கள் கேள்விப்பட்டதினாலே, மிகவும் வியாகுலப்படுகிறவனுமாயிருந்தான். அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான். ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார் அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார். எப்பாப்பிரோதீத்து, சகோதர அன்புள்ளவனும், சுவிசேஷ பணியிலே உடன் வேலையாளும், சேவை மனப்பான்மையுடைவனும், சபையோரை விசாரிக்கின்றவனும், தனக்கேற்பட்ட வியாதியினால் மற்றவர்கள் துக்கமடைய கூடாது என்ற மனப்பான்மையுடையவனும், மற்றவர்களுடைய குறைச்சலிலே உதவி செய்கின்றவனுமாக இருந்தான். அந்நாட்களிலே இருந்த சூழ்நிலையின்படி, இவர்கள் செல்வந்தர்கள் அல்ல. இவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து தேவ ஊழியத்தை நடப்பித்து வந்தவர்கள். ஆனாலும், மற்றவர்களுடைய குறைவுகளிலே, நிறைவாக்க வேண்டும் என்ற மனதுடையவர்களாக இருந்தார்கள். அன்றிருந்த மதத்தலைவர்களால் இவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள், சுவிசேஷத்தின் நிமித்தம் சிலர் ரோம அதிகாரிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்தார்கள். சபையோருக்கு சேவை செய்யவதற்குரிய சாதகமான சூழ்நிலைகள் எதுவும் அவர்களுக்கு இருந்ததில்லை. மீட்பின் நற்செய்தியை அறியாதவர்களுக்கு அந்த நற்செய்தியை அறிவித்து, ஜனக்கூட்டங்களை பெருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாக அல்ல, நற்செய்தியை அறிந்து, சபையிலே இருக்கின்றவர்கள், பின்வாங்கிப் போகக்கூடாது, அவர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டும், கிறிஸ்துவின் சிந்தையை தரித்தவர்களாக இருக்க வேண்டும். உண்மையும் உத்தமமுமாக சேவை செய்ய வேண்டும் என்ற மனதுடையவர்களாக அவர்களுக்கு ஆதரவாக இருந்தது வந்தார்கள்.

**பிலிப்பியர் 2:25**

**என் குறைச்சலுக்கு உதவி செய்தவனுமான எப்பாப்பிரோதீத்துவை உங்களிடத்தில் அனுப்பவேண்டுமென்று எண்ணினேன்.**

**ஜெபம்**: அன்பும் இரக்கமுள்ள பரலோக பிதாவே, எனக்கு முன்பாக இருக்கும் மேகம் போன்ற நல்ல சாட்சிகளின் வாழ்க்கைப் பார்த்து, அந்த வழியிலே நடந்து செல்ல, எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழி நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பின் நோக்கம்

உண்மையும் உத்தமமுமாய் ஊழியம் செய்து வந்த எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்கு சமீபமாக இருந்தான் என்பதை நேற்றய நாளின் தியானத்திலே குறிப்பிட்டிருந்தோம். அதனால், தேவ ஊழியராகிய பவுலும், பிலிப்பிய சபையிலுள்ளோரும் துக்கமடைந்திருந்தார்கள். ஆனாலும், அவன் சுகமடைந்ததை பிலிப்பிய சபையோர் அறியாதிருந்தார்கள். அவர்களுகடைய துக்கம்சந்தோஷமாக மாறும்படிக்கு, தேவ ஊழியராகிய பவுல் எப்பாப்பிரோதீத்துவை பிலிப்பிய சபைக்கு அதிசீக்கரமாக அனுப்பி வைத்தார். கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, எங்களோடு கூட இருக்கும் விசுவாசிகள் மற்றும் ஊழியம் செய்பவர்கள் வியாதியடையும் போது எங்கள் இருதயங்கள் உடைந்து போக்கின்றது அல்லவா? இன்றையா நாட்களிலே சபையோர் ஜெபிப்பது போல, அன்றைய நாட்களிலும் பவுலும் அவரை சார்ந்தவர்களும் தேவனை நோக்கி வேண்டுதல் செய்திருப்பார்கள். ஆனால் அவர்கள் வாயிலே முறுமுறுப்புக்கள் இருந்ததில்லை. அவர்கள் தங்கள் அழைப்பின் நோக்கத்தை மறந்து போகவில்லை. இப்படியாக முன்னோடிகளாக இருந்த விசுவாச மார்க்கத்தாரில் பலர், ஊழியப் பாதையிலே வியாதிப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலருக்கு தெய்வீக சுகம் கிடைக்கவில்லை. அதனால், அவர்கள் தேவனைப் பற்றும் விசுவாசத்திலே இருந்து சற்றும் தளர்ந்து போனதில்லை. தங்கள் வியாதியின் நேரத்திலும் மற்றவர்களுடைய சந்தோஷத்தையே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். சற்று தரித்திருந்து சிந்தித்துக் பாருங்கள். சுவிசேஷத்தினிமித்தம், சிலர், கல்லெறிந்து கொல்லப்பட்டார்கள், வேறு சிலர் பட்டயத்திற்கு இரையானார்கள், இன்னும் சிலர் சிலுவையிலே அறையப்பட்டார்கள். இப்படியப்பட்ட மரணமானது, வியாதியடைந்து மரிப்பதிலும் மிகவும் கொடூரமானதாய் இருக்கும். அப்படிப்பட்ட மரணத்திலும், தேவ ஊழியர்கள், முறுமுறுக்காமல், தங்களை தேவ சித்தத்திற்கென்று ஒப்புக் கொடுத்தார்கள். மிகுதியாய் உயிரோடிந்தவர்களுக்கு துக்கம் உண்டாயிருந்தாலும், அவர்கள் தங்கள் அழைப்பின் நோக்கத்தை மறந்து போகவில்லை. எதற்காக அவர்கள் பிடிக்கப்பட்டார்களோ, அந்த நோக்கத்தின்மேல் கண்நோக்கமாய் இருந்து, அதை நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற வாஞ்சையுடையவர்களாக இருந்தார்கள். தேவ ஆவியானவர் அவர்களை பெலப்படுத்தி தேவசித்தத்தை அவர்கள் வாழ்விலே நிறைவேற்ற உதவி செய்தார்.

**பிலிப்பியர் 2:28**

**ஆகையால் நீங்கள் அவனை மறுபடியும் கண்டு சந்தோஷப்படவும், என் துக்கங் குறையவும், அவனை அதிசீக்கிரமாய் அனுப்பினேன்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, நான் உபத்திரவங்களை சகிக்க நேர்ந்தாலும், நீர் அழைத்த அழைப்பின் நோக்கத்தை மறந்து பின்னிட்டு திரும்பமால், துன்ப வேளையிலும் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவனாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உறுதியாய் தரித்திருங்கள்

ஆண்டவராகிய இயேசுதாமே தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, தம்முடைய சீஷர்களை நோக்கி: நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். அவருடைய சீ'ர்கள் அவரை நோக்கி: இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம் இதினாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும் அது இப்பொழுது வந்திருக்கிறது. ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். அந்தப் பிரகாரமாகவே, ஆண்டவராகிய இயேசுவைபிடிக்கும்படி மத்தலைவர்களும், போர்வீரரும் வந்தபோது, அவரை விசுவசிக்கின்றோம் என்று கூறிய யாரும் சிதறுண்டு போனார்கள். தங்கள் எஜமானனை கைவிட்டோம் என்று அவர்கள் துக்கத்தின்மேல் துக்கமடையாமல் இருக்கும்படி, பிதாவாகிய தேவன் தன்னோடு இருக்கின்றார் என்றும், தான் உலகத்திலே மாண்டுபோகும்படியல்ல, பிதாவாகிய தேவனின் சித்தத்தை நிறைவேற்றுவதால், உலகத்தை ஜெயங்கொண்டேன் என்று அவர்களை தேற்றினார். பிரியமானவர்களே, விசுவாச வாழ்க்கையிலே மற்றய மனிதர்களுடைய பெலவீனங்களால், துன்பங்கள், துயரங்கள் உண்டாகலாம். தனித்து விடப்பட்டது போல தோன்றலாம். அந்த வேளையிலே, நாங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், நாங்கள் தனித்து விடப்படுவதில்லை. துணையாளராகிய தேவஆவியானவர் கூடஇருந்து உங்களை நடத்தி செல்கின்றார். எனவே, நாங்கள் சுயஅனுதாபங்களைவிட்டு, முறுமுறுப்புக்களைவிட்டு, தேவனுக்கு தங்களை ஒப்புத்த சீஷர்களைப் போல நாமும் மற்றவர்க ளைத் தேற்றுகின்றவர்களாக மாறவேண்டும்.

**மத்தேயு 28:20**

**இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லி, திடனற்றவர்களைத் தேற்றி, பலவீனரைத் தாங்கி, எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# செய்கைளுக்குரிய பலன் உண்டு!

அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் என்று தெசலோனிக்கேய சபையோருக்கு தேவ ஊழியராகிய பவுல் வேண்டுகோள்விடுத்திருப்பதை 1தெச 5ம் அதிகாரத்திலே 12ம் 13ம் வசனங்களில் வாசிக்கலாம். இந்த 5ம் அதிகாரம் முழுவதையும் நீங்கள் அவ்வப்போது வாசித்து தியானிப்பது உங்கள் பக்திவிருத்திக்கு நன்மையாக இருக்கும்.

**ரோமர் 2:6**

**தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.**

முதலாவதாக நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்வென்றால், ஒருவேளை கிறிஸ்துவுக்காக பிரயாசப்பட்டவனை நீங்கள் மதித்து நடந்தாலும்,நடக்காவிட்டாலும், அவன் தன் பிரயாசத்திற்குரிய பலனை அடைந்து கொள்வான். அவனவனுக்குரிய பலனை ஆண்டவர் இயேசு நிச்சயமாக கொடுப்பார். சில நேரங்களிலே, உங்களுக்கு நன்மை நினைத்த ஒருவரை நீங்கள் சத்துருவாக எண்ணி, அவரை மனநோகப்பண்ணியும், அவர் தன் நற்கிரியைகளிருந்து சோர்ந்து போகாமல், கிறிஸ்துவினிமித்தம் தொடர்ந்து நன்மை செய்து வரும் போது, அவருக்கு பரலோகிலே கைமாறு மிகுதியாக இருக்கும். அவர் தன் கிரியைகளுக்கு தக்கபலனை தேவன் கொடுப்பார். நீங்களும் உங்கள் சுயநீதியின் கிரியைகளுக்கு தக்க பலனை அடைந்து கொள்வீர்கள். தேவனிடத்தில் பட்சபதமில்லை. (ரோமர் 2:11). ஆனால், சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், சம்பவங்கள் கார்மேகங்கள் சூழ்ந்ததைப் போல தெளிவற்றதாக இருந்தாலும், கர்த்தருடைய நேரத்திலே வெளிச்சம் உதிக்கும் வரைக்கும் கர்த்தருடைய வார்த்தையினிமித்தம், நீங்கள் உங்களுக்காக உண்மையாகபிரயாசப்படுகின்றவர்களை மதித்து கனமாக எண்ணி, நீடிய பொறுமையுள்ளவர்களாக இருக்கும் போது, நீங்கள் தேவசாயலிலே வளர்ந்து பெருகின்றவர்களாக இருப்பீர்கள். அதுமட்டுமல்லாமல், உங் கள் நற்கிரியைகளுக்குரிய பலனை அடைந்து கொள்வீர்கள். பிலிப்பியர் இரண்டாம் அதிகாரத்தின் முடிவிலே, எப்பாப்பிரோதீத்து கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம் மரணத்திற்கு சமீபமாக இருந்தான் என்பதை காண்கின்றோம். கிறிஸ்துவினிமித்தம் உங்களுக்காக பிரயாசப்படுகின் றவர்களை கனப்படுத்துங்கள். அவர்கள் குறையிலே நீங்கள் அவர்களை விசாரிக்கின்றவர்களாக இருங்கள்.

**ஜெபம்:** பரலோக தேவனே, என்னுடைய நலனுக்காக நற்கிரியைகளை நடப்பிக்கின்றவர்களை மதித்து, அவர்களுக்கு நன்றியயிதலுள்ளவனாக இருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தீமைக்கு பதிலாக நன்மை செய்யுங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனொவுன், தன் அயலிலே வாழ்ந்து வந்ம குடும்பத்தினருக்கு எதிராக அவதூறு பேசி, அவர்களை அவமான படுத்தினான். அந்த குடும்பத்திலுள்ள பிள்ளைகள், தங்கள் தகப்பனை நோக்கி: அப்பா, அந்த மனிதன் அநியாயமாக எங்களை நிந்திக்கின் றான், நீங்கள் ஏன் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கின்றீர்கள் என்று கூறினார்கள். அதற்கு தகப்பனார்: பிள்ளைகளே, அந்த மனி தனுடைய தப்பனானவர், எங்கள்கஷ்டத்தின் நாட்களிலே எங்களுக்கு நன்மை செய்தார். அவர் நிமித்தம், இவனை நாங்கள் பொறுமையாக சகித்து கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறினார். அவர் அவிசுவாசிகளாக இருந்தபோதும், மனிதநேயம் என்ற பேரிலே, நன்றியிதலுள்ளவர்களாக இருக்க அறிந்திருந்தார்கள். தீமைக்கு தீமை செய்யாமல், பொறுமை யோடு சகித்ததுக் கொண்டார்கள். ஆனால், இந்நாட்களிலே, சில இடங் களிலே, தேவ பிள்ளைகள் மத்தியிலே இப்படிப்பட்ட குணாதிசயங் களை காண்பது அரிதாக இருக்கின்றது. ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள் எல்லா மனுஷருக்குமுன்பாகவும் யோக்கியமா னவைகளைச் செய்ய நாடுங்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகி ன்றது. "கண்ணுக்குக் கண், பல்லுக்கு பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் தீமை யோடு எதிர்த்து நிற்கவேண்டாம் ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக் கொடு. உன் னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென் றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ." என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே, ஒரு விசுவாசியானவன், தீமைக்கு தீமை செய்யாமல் இருப்பது ஒரு காரியம் ஆனால் நன்மைக்கு பதிலாக தீமை நினைக்கும் ஒரு விசுவா சியைக் குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள்? எனவே, நன் மைக்கு கைமாறாக தீமை செய்யாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த பிரபஞ்சத்தின் மக்கள் கூட நன்றியுள்ளவர் களாக இருக்கும் போது, தேவ பிள்ளைகள் எத்தனை அதிகமாய் செய ற்பட வேண்டும். சிலர் கடமையுணர்வோடு அப்படி இருக்கின்றார்கள். ஆனால், தேவ பிள்ளைகளாகிய நாமோ, தேவனுக்கும் மனிதர்களு க்கும் முன்பாக உண்மை மனதுடன் காணப்பட வேண்டும்.

**நீதிமொழிகள் 17:13**

**நன்மைக்குத் தீமைசெய்கிறவன் எவனோ, அவன் வீட்டைவிட்டுத் தீமை நீங்காது.**

**ஜெபம்:** இருதயங்களை ஆராய்ந்து சிந்தையை அறிகின்ற தேவனே, கடமையுணர்வோடு மாத்திரமல்ல, உண்மை மனதுடன் கண் கண்ட சகோதரர்களுக்கு நன்றியறிதலுள்ளவனாக இருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆலோசனைகளை கேளுங்கள்!

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, அக்காலத்திலே இருந்த மதத்தலைவர்கள், பரிசேயர் மற்றும் வேதபாரகர்கள் ஏன் ஆண்டவர் இயேசுவின் மேல் கோபம் கொண்டார்கள்? ஏன் அவரை பகைத்து கொலை செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார்கள்? முதலாவதாக, அவர்களுடைய உண்மையான பரிதாபமான நிலைமையை ஆண்வர் இயேசு அவர்களுக்கு எடுத்துக் கூறினார். இரண்டாவதாக, அந்த நிலைமையிலிருந்துஅவர்கள் விடுதலையடைய வேண்டும் என்று தம்மை யார் என்று அவர்களுக்கு வெளிப்படுத்தினார். தங்கள் நிலையை உணர்ந்து, விடுதலையடையும்படிக்கு ஆண்டவர் இயேசுவை நாடாமல், அவரை சிலுவையில் அறைய வேணடும் என்று தீர்மானம் செய்தார்கள். இன்றைய நாட்களிலே, உங்களைக் குறித்தோ, உங்களுக்கு அன்பானவர்களைக் குறித்தோ, ஒரு குறைவான காரியத்தை வெளிப்படுத்தும் போது, உங்கள் மனநிலை எப்படி இருக்கின்றது? கூறப்படும் காரியத்தை வேத வார்த்தையின் நிழலில் ஆராய்ந்து அறிய வேண்டும் என்ற சிந்தை உண்டாகின்றதா? அல்லது எப்படி அந்த குறையை நியாயப்படுத்த வேண்டும் என்கின்ற சிந்தை உண்டாகின்றதா? அல்லது பரிசேயர் வேதபாரகரைப்போல எதிர்த்து நிற்க வேண்டும் என்ற எண்ணம் உண்டாகின்றதா? அக்காலத்திலே, ஆண்டவர் இயேசுவை உண்மையாய் பின்பற்றுகின்ற ஊழியர்கள் விசுவாசிகள் மத்தியிலே ஒரு சில கள்ளப் போதர்களும், மாய்மாலம் பண்ணும் அவிசுவாசிகளும் இருந்தார்கள். அதுபோல இக்காலத்திலும் அப்படிப்பட்ட ஒரு சிலர் அங்காங்கே காணப்படலாம். இப்படிப்பட்டவர்களை குறித்து தேவ ஊழியராகிய பவுல் கூறும் போது, "அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுதுகண்ணீரோடும் சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்." நீங்கள் அப்படிப்பட்டவர்களை நோக்காமல், முதலாவதாக பொருளாசை இல்லாமல் தேவனை சேவிக்கும் உண்மையும் உத்தமமுமான ஊழியர்களை நோக்குங்கள். அற்புத அதிசயங்களையே தங்கள் வாழ்வில் முதன்மைப்படுத்துகின்றவர்களை பின்பற்றிப் போகாமல், நிகரற்ற அதிசயமாகிய இரட்சிப்பை தங்கள் வாழ்க்கையில் உயர்த்தி, தெய்வீக கனிகளை தங்கள் வாழ்க்கையில் வெளிப்படுத்தும் ஊழியர்களை பின்பற்றுங்கள்.

**எபிரெயர் 13:7**

**அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழும்படி என்னை வேறு பிரித்த தேவனே, குற்றங் குறைகளை நியாயப்படுத்துகின்றவனாக வாழாமல், மனந்திரும்பி மறுரூபமாகும் இருதயத்தை நீர் எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தெளிவான கிணற்றுத் தண்ணீர்?

ஒரு ஊரிலே இருந்த பொதுக் கிணறானது பல ஆண்டுகளாக இறைத்து சுத்தப்படுத்தப்படவில்லை.ஆனாலும், அந்த ஆழமான கிணற்றிலே தண்ணீர் தெளிவாகவே காணப்பட்டது. ஒரு நாள் அந்தக் கிணற்றுக்குள் ஒரு பாம்பு தவறுதலாக விழுந்து விட்டதால், அந்தப் பாம்பை வெளியே எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை செய்தார்கள். சில மணிநேரத்திற்குள் பாம்பை வெளியே எடுத்து விட்டார்கள். ஆனால், தண்ணீர் கலக்கப்பட்டதால், தெளிவாக தெரிந்த தண்ணீருக்கு கீழ் அடங்கியிருந்த சேறும் கழிவுப் பொருட்களும் எவ்வளவு அசுத்தமாக இருந்தது என்று அந்த ஊரிலுள்ளவர்களுக்கு தெரிய வந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, வேத வசனங்களை தியானிக்கும் போதும், பிரசங்கங்கள், வேதப்படிக்புக்களை கேட்கும் போதும், தீர்க்கதரிசனங்கள் கூறப்படும் போதும், அவை எப்படி இருக்க வேண்டும் என்ற மனநிலை உங்களுக்கு தோன்றுகின்றது. சிலர், எப்போதும் தங்கள் வாழ்வின் நிறைவாய் தோன்றுகின்றவைகளை பற்றியதாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.எனவே, எப்போதும் சபையோரின் காதுகளுக்கு இனிமையானவைகளை உபதேசிக்கும் போதகர்களையும் நாடுகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள், எப்போதும் மற்றவர்களுக்கு உதவுபவர்களாகவே காணப்படுவார்கள். செயற்திட்டங்கள் அதிகமாக இருக்கும். சுவிசேஷம் அறிவிப்பதில் குறைவுகள் காணப்படாது. சபையிலே ஜனங்கள் திரளாய் கூடுவார்கள். ஆனால், தங்கள் குறைவுகளை பற்றிய காரியத்தைக் குறித்து மறந்து போய்விடுகின்றார்கள். பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தை மையமாக வைத்து, வேதத்தைத் தியானித்து வருகின்றோம். இரண்டு அதிகாரங்களை நிறைவு செய்துள்ளோம். மேற்கூறப்பட்ட நிலைமைக்கு ஒத்ததாகவே காணப்பட்டது. அவர்களுடைய வாழ்விலே அதிக நன்மைகள் இருந்தது. ஆனாலும், அவர்களுக்குள்ளே இருந்த குறைகள் அவர்களை அழைப்பின் நோக்கத்திலிருந்து விலகச் செய்துவிடும் என்று அறிந்த தேவ ஊழியராகிய பவுல், அவர்களுக்கு ஆலோசனைகளும், அறிவுரைகரைகளையும், பாரட்டுக்களையும், எச்சரிப்புக்களையும் வழங்கி இருக்கின்றார். இன்று சில சபைகளிலே, மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, பரிசுத்தமாகுதல் குறித்த காரியங்களை பிரசங்கிப்பதை தடை செய்து, அவ்வண்ணமாக உபதேசிக்கும் போதகர்களை தங்கள் சபைகளில், பிரசங்கிக்க அழைப்பதில்லை. இவைகளை குறித்து உங்கள் சுத்த மனசாட்சி உங்களுக்கு கூறுவது என்ன?

**2 கொரிந்தியர் 7:1**

பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

**ஜெபம்:** பரிசுத்தத்திற்கென்று அழைத்த தேவனே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, என்னை சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்த பெலன் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நல்ல உபதேசங்கள்

பிள்ளைகளை கண்டித்து, தண்டித்து வளர்க்க வேண்டும் என்று சில பெற்றோர்கள் கூறிக் கொள்வார்கள். வேறு சிலர், பிள்ளைகளுக்கு அடிக்காமல், அன்பு காட்டி, அரவணைத்து நடத்த வேண்டும் கூறிக் கொள்கின்றார்கள். இப்படியாக இந்த உலகிலே பற்பல அபிப்பிராயங்களோடு பிள்ளைகளை வளர்த்து வருகின்றார்கள். தங்கள் வளர்ப்பு முறையே சிறந்தது என்று அவரவர் பெருமை பாராட்டி கொள்கின்றார்கள். ஆனாலும் இந்த உலகிலே வன்முறைகள் குறைந்து கொண்டு போகின்றதா? அல்லது அதிகரித்துக் கொண்டு போகின்றதா? சில விசுவாசக் குடும்பங்களிலே, பிள்ளைகள் பெலனற்றுப் போகும்படிக்கு அவர்கள் கடுமையாக தண்டித்து, அவர்களுடைய நிலைமையை அறியாமல், முரட்டுத்தனமாக அவர்களை கோபப்படுத்திக் கொள்கின்றார்கள். வேறு சில விசுவாச குடும்பங்களிலே, முற்போக்குவாதகொள்கைகளின்படி தங்கள் பிள்ளைகளை வளர்த்து, அவர் தவறும் போது, அவர்களை கண் டித்துணர்த்தாமல், அவர்கள் வாலிப நாட்களிலே உடுத்திக், குடித்து, சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று கூறிக் கொள்கின்றார்கள். தங்கள் பிள்ளைகளை நேசிக்கின்றவர்கள் அவர்களை கண்டித்து தண்டித்து வளர்கின்றார்கள் என்று பரிசுத்த வேதாமமம் கூறுகின்றது. அதனாலென்ன, அதிகமாக கண்டித்து தண்டிக்கின்றவன் தன் பிள்ளையை அதிகமாக நேசிக்கின்றான் என்று கூற முடியுமா? *“பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.”* என்று நீதி மொழிகள் *22:6ல்* வாசிக்கின்றோம். பிள்ளைகளை அன்பு காட்டி அர வணைக்கும் நேரமுண்டு. அதுபோல அவர்களை குறித்து நேரத்தில் கண்டித்துணர்த்தி நடத்த வேண்டும். பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும், அது தானாக மாறிவிடும் என்று அதை பாராமுகமாக விட்டுவிடும் பெற்றோர், அந்தப் பிள்ளையை தவறான வழியிலே நடத்த கின்றவனாக இருக்கின்றான். இவ்வண்ணமாகவே, நல்ல மேய்ப்பனும் இருக்கின்றார். மேய்ப்பனானவன், ஆடுகளை அதின்அதின் போக்குகளுக்கு விட்டுவிடுவதில்லை. அங்கே ஒவ்வொன்றிற்னும் ஒரு நேரமுண்டு, ஒழுங்குகள் உண்டு, பராமரிப்பு உண்டு, மருந்து கொடுக்கும் நேரமுண்டு. இவையெல்லாவற்றையும்மந்தையைகாக்கும்படி செய்கின்றான். எனவே, இவைகளை குறித்து அசட்டையாகவும், அசதியாகவும், அற்பமாகவும் எண்ணாமல், உபதேசங்களை கேட்டு அதன் வழியிலே நடக்க கற்றுக் கொள்ளுங்கள்.

**நீதிமொழிகள் 22:6**

**பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**

**ஜெபம்:** உம்முடைய பரிசுத்தத்துக்கு நான் பங்குள்ளவர்களாகும்பொருட்டு என்னுடைய பிரயோஜனத்துக்காகவே என்னை சிட்சித்து நடத்தும் தேவனே, உம்முடைய சிட்சையை ஏற்றுக் கொண்டு நடக்க உணர்வள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழி யாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்

**1 பேதுரு 5:8**

**தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்;**

இன்றுசிலர் குறைவுகளை பேசாமல், நிறைவுகளையே பேசுங்கள் என்று சொல்லிக் கொள்கின்றார்கள். ஆனால், நாம் நிறைவடையும் நோக்கத்தோடு, தேவ பயத்தோடு குறைவுகளும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, பிலிப்பியருக்கு அப்போஸ்தலராகிய பவுலும், தீமோத்தேயுவும் எழுதிய நிருபத்திலுள்ள வசனங்களை, ஆரம்பத்திலிருந்து, ஒவ்வொன்றாக வாசித்துப் பாருங்கள். எத்தனைன வசனங்கள் அவர்களுடைய நிறைவையும், எத்தனைவசனங்கள்அவர்களுடைய குறைகளையும், எத்தனை வசனங்கள் அவர்கள் எதைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் குறித்து கூறுகின்றது என்று ஆராய்ந்து பாருங்கள். ஒரு பிள்ளையானது பாடசாலைக்கு செல்ல ஆரம்பிக்கும் போது, அதன் பெற்றோர், பாடசாலைக்கு சென்று நன்றாக படிக்க வேண்டும். நல்ல பழக்கவழங்கங்களை கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள். அத்துடன் அவர்கள் அதை நிறுத்திவிடுகின்றார்களா? ஆசிரியர்களுக்கு கீழ்படிய வேண்டும். சக மாணவர்கள் சண்டைக்கு வந்தால் என்ன செய்ய வேண்டும். தெருவிலே அறிமுகமாகதவர்களோடு பேச வேண்டாம் என்று பற்பல காரியங்களைக் குறித்து எச்சரிப்பை வழங்குவார்கள். அதைத் திரும்ப திரும்ப ஞாபகப்படுத்துவார்கள். இந்நாட்களிலே, பாடசாலை நேரத்திலே, ஆபத்தான வேளைகள், அவசரகால நிலைமைகள் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக்கூடாது என்று மாணவர்களுக்கு பயிற்சி அழிக்கின்றார்கள். என்ன செய்ய வேண்டும் என்று மாத்திரம் சொல்லிக் கொடுத்தால் போதாதா? கோணலும் மாறுபாடுமான உலகிலே வஞ்சிக்கும் ஆவிகள் உண்டு. அவைகள் மனிதர்கள் வழியாகவே செயற்பட்டு வருகின்றது. எனவே, வெற்றியுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்வதற்கு, நாம் என்னத்தை செய்ய வேண்டும் என்பது மட்டும் போதாது. என்னததை செய்யக்கூடாது என்பதையும் அறிந்திருக்க வேண்டும். ஆதியிலே தேவனாகிய கர்த்தர் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்தபோது, புசிப்புக்குரிய மரத்தின் கனிகளை மாத்திரம் கூறாமல், புசிக்கக்கூடாத மரத்தின் கனியையும் காண்பித்தார். எச்சரிப்பை வழங்கினார். எனவே, நாமும் தெளிந்த புத்தியுள்ளவர்களாக சிந்திக்க வேண்டும். வஞ்சனைகளிலே அகப்படாதபடிக்கு, எப்போதும் விழிப்புள்ளவர்களாக காணப்பட வேண்டும். எதிராளியானவனை ஜெயிக்கும்படிக்கு, கீழ்படிவோடு கர்த்தருடைய பலத்த கரத்திற்குள் அடங்கியிருங்கள்.

**ஜெபம்**:பரலோகதேவனே, உம்முடைய எச்சரிப்பின் வசனங்களைக் குறித்துமனம்சலித்துப்போய்விடாதபடிக்கு, உம்முடைய வார்த்தையின் வழியிலே நான் வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சீர்திருத்தங்கள்

மேற்கத்தைய நாடொன்றிலே, சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக, ஒரு வாலிபனானவன், முதலாவதாக, பயிற்சி பெற்றுக் கொள்ளுவதற்குரிய தகமையை பெற்றுக் கொள்ளும் பரீட்சையிலே சித்தி பெற வேண்டியிருந்தது. அதை முடித்து பின்பு, வாகனத்தை ஓட்டு வதற்காக பயிற்சியயை பெற்று, ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்குள், அதிவேக நெடுஞ்சாலைகளிலே வாக னத்தை ஓட்டுவதற்காக முழுமையான சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற் றுக் கொண்டான். மூன்று ஆண்டுக ளுக்கு பின்னர், ஒரு நாள், பொலி சார் அவனைப் பின்தொடர்ந்து, அவ னுடைய வாகனத்தை மறித்தார்கள். அனைத்து வழி நிறுத்தும் இடத்திலே ஏன் வாகனத்தை நிறுத்தவில்லை என்று பொலிசார் அவனிடத்திலே கேட்டார்கள். அதற்கு அவன், நான் வாகனத்தை நிறுத்திதான் சென்றேன் என்று பதிலளித்தான். அதற்கு பொலிசார்: நீ வாகனத்தை முழுமையாக நிறுத்தவில்லை என்றார்கள். பிரியமான சகோதர சகோதரிகளே, முதலாவதாக, அவனை நிறுத்திய பொலிசார், நீ இவ்வளவு காலமும் விபத்துக்கள் ஏதும் இல்லாமல் நன் றாய் ஓடினாய் என்று நன்றி செலுத்தினார்களா? அல்லது எப்போதாவது அவர்கள் சாரதிகளை வழி மறித்து, அவர்களுடை நல்ல ஓட்டத்திற்காக பாராட்டுகின்றார்களா? முழுமையாக நிறுத்தாமல், செல்வது பெருங்குற் றமா? அதனால் அவன் எந்த விவத்திலும் சிக்கிக் கொள்ளவில்லையே? இரண்டு வருடங்கள் படித்து, பயிற்சி பெற்று முழுமையான சாரதி அனு மதினப் பத்திரத்தை பெற்ற பின்பு, ஏன் பொலிசார் சாரதிகளை பின் தொடர வேண்டும்? தெருவிலே இருக்கும் அடையாளங்கள், சாலை விதிகள் மட்டும் போதாதா? ஏன் தண்டனை? ஏன் அபராதம்? ஏன் சில காலத்திற்கு அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப்படுகின்றது? ஏன் சிலர் சில மாதங்களுக்கு சிறைக்கு செல்கின்றார்கள்? நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே, கண்டித்துணர்த்துதல், சில வேளை களிலே கசப்பான அனுபவத்தை உண்டு பண்ணும். மற்றவர்கள் முன்னி லையிலே அவமானம் அடைந்தது போல இருக்கும். ஆனால், நல்ல சாரதிகள் திருத்தப்படுவதுபோல, ஆவிக்குரிய வாழ்விலும் சீர்திருத்த ங்கள் அவசியமானது. அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்காமலும் கலக ங்களை உண்டாக்காமலும் நல்ல மனதோடு அவைகளை ஏற்றுக் கொள் ளுங்கள். உங்கள் விசாரிக்கின்ற தேவனாகிய கர்த்தர் நீதியுள்ளவர்.

**எபிரெயர் 12:13**

முடமாயிருக்கிறது பிசகிப் போகாமல் சொஸ்தமாகும் படிக்கு, உங்கள் பாதங்க ளுக்கு வழிகளைச் செவ் வைப்படுத்துங்கள்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தேவனே, என்னுடைய வாழ்வு எப்போதும் உம்மிலே நிலையாக இருக்கும்படிக்கு, நீர் எனக்கு உணர்வுள்ள இருதய த்தையும், பிரகாசமுள்ள மனக்கண்களையும் தந்து வழிநடத்திச் செல் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஜீவனுக்குப் போகிற வாசல்

நீங்கள்ஒருவீட்டிற்கு விருந்தினராக போகும் போது, பொதுவாக, அங்கே நன்மையானவைகளே பேசிக் கொள்வார்கள். நீங்கள் வீட்டுக்காரரையும் அவர் குடும்பத்தினரின் நன்மைகளை பாராட்டுவீர்கள். அவர்களும் உங் களையும் உங்கள் பிள்ளைகளையும் பாராட்டுவார்கள். நீங்கள் விரு ந்துக்கு சென்றிப்பதால், அங்கே சுதந்திரமாக நடந்து கொள்ளாமல், ஜாக்கிரதையோடு காணப்படுவீர் கள். ஒருவேளை உங்கள் பிள்ளை கள் அந்த வீட்டிலே குழப்பம் பண் ணினாலும். விருந்துக்கு உங்களை அழைத்தவர்கள், அதை பாராமுக மாக விட்டுவிடுவார்கள். ஆனால், நீங்கள் சொந்த வீட்டிற்கு திரும்பிய பின்பு, வீட்டிலே விருந்துகள் அத் தனை சுவாரசியமாக இருப்பதில் லை. ஏன்? வீட்டிலே சுதந்திரம் உண்டு அதே வேளையிலே, வீட்டிலே நெறி ப்படுத்தல் உண்டு. சொந்த தகப்பன் தன் பிள்ளைகளையும் அவர்கள் எதிர்காலத்தைக் குறித்தும் கரிசணை யுள்ளவராக இருப்ப தால், அங்கே பாராட்டுகளும், உற்சாகப்படுத்துத லோடும், உண்மை யான கண்டிப்பும், கடிந்து கொள்ளுதலும் இருக்கும். சில சபைகளிலே, ஜனங்களை தக்கவைப்பதற்காக, சில ஊழியர்கள், விசுவாசிகளின் உண்மை நிலைமையை கூறுவதில்லை. அவர்களை பாராட்டி, உற்சாக ப்படுத்தும் வார்த்தைகளை கூறிக் கொள்வார்கள். நல்லது. ஆனால் சீர்திருத்தம் இல்லை. விசுவாசிகள் விருந்தினரைப் போல அங்கு இப்பதினாலலே ஊழியங்களை நடப்பிக்கின்றவர்களுக்கு சில இலாபம் உண்டாகின்றது. அதனால், அங்கே சீர்திருத்ததிற்கு இடமில்லை. இந்த நிலைமையை குறித்து வெளியரங்கமாக பேசுவதும் சிலருக்கு கடின மாக இருக்கலாம். ஆனால், எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். வேதமே சத்தியம். சத்திய வேதம் முழுமையானது. அரைவாசி சத்தியம் என்பது தேவனுக்குரியது அல்ல. அது வஞ்சனைக்குரியது. சத்தியமா னது, ஜனத்திரளிலும், பணத்தொகையிலும், செயற்திட்டங்களினாலும் அளவிடப்படுவதில்லை. “இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசி யுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கி றது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிரு க்கின்றார். கருப்பொருளாவது, உண்மையும் உத்தமமுமாக நட ந்து உங்களை சீர்திருத்தி நல்வழிப்படுத்துகின்ற ஊழியர்களை கனம் பண்ணுங்கள்.

**மத்தேயு 7:14**

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது;

**ஜெபம்**: என் நேசிக்கின்ற தேவனே, உமக்கு பயந்து உம் வழியிலே நடப்பவர்களின் ஆலோசனைகளை பின்பற்றி கொண்டு, கடிந்து கொள்ளுதல்களை ஏற்றுக் கொள்ளும் உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.